நிறுவன அமைப்பாளர்

59, ஐயா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி: 044-28457676

8-8-2014

பத்திரிகை அறிக்கை

# காவல்துறையை, புலனாய்வுத் துறையை நவீனப்படுத்தாமல் குற்றங்களை தடுக்க முடியாது!

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பற்றி தமிழக முதல்வர் பெருமிதமாக சட்டசபையில் உரையாற்றியுள்ளார். திட்டமிட்ட கொலை, பாலியல் வன்கொடுமை, ஆள் கடத்தல் வழக்கு ஆகியவற்றினை விசாரிக்க தனி சிறப்பு புலன் விசாரணை அமைப்பை முதல் கட்டமாக 20 மாவட்டங்களில் துவக்க உள்ளதாக அறிவித்துள்ளார். இதனை இந்து முன்னணி வரவேற்கிறது, பாராட்டுகிறது.

அதே சமயம் திட்டமிட்டப்படுகொலைகள் செய்யும் முஸ்லீம் பயங்கரவாதிகளை ஒடுக்க, அவர்களுக்கு மூளை சலவை செய்பவர்கள், பண உதவி செய்பவர்கள், பதுங்க இடம் கொடுப்பவர்கள், எல்லோர் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க சட்ட இயற்றப்பட வேண்டும்.அவர்களை தப்புவிக்க உதவும் இஸ்லாமிய அமைப்புகளை தடை செய்ய வேண்டும்.

மேலும், ஜாமினில் வெளிவந்து தலைமறைவாக இருப்பவர்களை தேடுவதிலும், தேடப்பட்டு வரும் குற்றவாளிகளை கண்டுபிடிப்பதிலும் காவல்துறை அலட்சியம் காட்டுகிறது. சமீபத்தில் வெடிகுண்டு சதி வழக்கில் சம்பந்தப்பட்டு 20 ஆண்டுகளாக தேடப்பட்ட குற்றவாளிகளை கைது செய்துள்ளனர். ஆனால் இவர்களை பிடிப்பதில் இத்தனை கால தாமதம் ஏன்? பயங்கரவாதிகளை கண்டுபிடிப்பதில், கைது செய்வதில் இத்தகைய காலதாமதம் மன்னிக்க முடியாத குற்றம். தற்போது பிடிபட்டுள்ள இந்த குற்றவாளிகள் கடந்த 20 ஆண்டுகளில் எத்தகைய சதி செயல்களை செய்தனர்? அவர்கள் செய்த குற்றச்செயலுக்கான ஆதாரத்தை எப்படி காவல்துறை சேகரிக்கும்? இத்தகைய நிலையில் தேடப்பட்டு வரும் பயங்கரவாதிகள் குறித்த பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, குறிப்பிட்ட காலத்திற்குள் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்திருக்க வேண்டாமா? எந்த வழக்கிலும் பயங்கரவாதிகளுக்கு உடந்தையானவர்களை கைது செய்வதில்லை என்றால், குற்றவாளிக்கு உடந்தையாக இருந்தவர்கள் மேலும் மேலும் புதிய பயங்கரவாதிகளை உருவாக்க பயம் இல்லாமல் செயல்படுகிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்கு இந்து முன்னணி தெரிவித்துக்கொள்கிறது.

காவல்துறை நவீனப்படுத்துவதுடன், விரைந்து செயல்படவும் பயிற்சி கொடுக்க வேண்டும். உதாரணமாக ஜூலை 18 அன்று பாடி சுரேஷ்குமார் படுகொலை செய்யப்பட்ட இடத்திற்கு பத்து அடி தூரத்தில் போலீஸ் போஸ்ட் இருக்கிறது. அங்கிருந்தவர்கள் ஓடிப்போய் அதிகாரிகளிடம் கூறியிருக்கிறார்கள். காவல்துறை அதிகாரிகள் ஒயர்லஸ்ஸில் அறிவித்து அதிரடி சோதனை மேற்கொண்டிருந்தால், கொலையாளிகள் திருமுல்லைவாயிலுக்கு முன்பே கைது செய்திருக்கலாம். அசைக்க முடியாத ஆதாரமும் கிடைத்திருக்கும். குற்றவாளிகளுக்கு இனி குற்றம் செய்ய துணிவு வராமல் முறியடித்திருக்கலாம்.

தமிழகத்திலும், கேரளத்திலும் அதிகமான அளவில் முஸ்லீம் பயங்கரவாதிகளின் கொடூரம் நடைபெறுகிறது. அதனை முறியடிக்க பயங்கரவாதிகளை எதிர்கொள்ள காவல்துறைக்குத் தனிப் பயிற்சியை இஸ்ரேல் போன்ற நாடுகளின் உதவியோடு செய்ய வேண்டும். காயல்பட்டினம், தேவி பட்டினம் போன்ற பகுதிகளில் குற்றவாளிகளை கைது செய்ய சென்றபோது அதிகாரிகளை முஸ்லீம்கள் தடுத்துள்ள செய்தி கவலை அளிக்கிறது. தமிழகத்தில் முஸ்லீம் பயங்கரவாதம் பெருகியுள்ளது. ஈரான் நாட்டு ஜீகாதி போருக்கு(ஐ.எஸ்.ஐ.எஸ்.) தமிழகத்திலிருந்து 100 பேர் சென்றுள்ளனர் என்பது அதிர்ச்சி அளிக்கும் செய்தி! ஆனால் சமூக வலைத்தளங்களிலும், பத்திரிகைகளிலும் செய்தி வந்த பின்னரே ஏதோ நாங்களும் செயல்படுகிறோம் என்பதை காட்ட காவல்துறை நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிகிறது. இலங்கை வழியாக முஸ்லீம் பயங்கரவாதிகள் வருவதும் அதிகரித்துள்ளது. பயங்கரவாதிகளின் சதியை முறியடிக்க அரசு முனையாவிட்டால், மக்கள் அரசு மீது நம்பிக்கையை இழந்துவிடுவார்கள் என எச்சரிக்கிறோம்.

இன்னமும் காவல்துறையில் 50% மேல் எந்த முனைப்பும் காட்டாது பணி செய்வோர் இருக்கின்றனர். அதற்குக் காரணம் காவல்துறை இக்காலத்திற்கு ஏற்ப நவீனப்படுத்தப்படவில்லை. பயங்கரவாதிகளுக்கு இருக்கும் நெட்வோர்க்கை அறிந்து கொண்டு நடவடிக்கை எடுக்க காவலர்களுக்கு நவீன கருவிகளை இயக்க அடிப்படையில் பயிற்சி கொடுக்க வேண்டும். விரைந்து செயல்படவும், ஆபத்து காலங்களில் உடனடியாக செயல்பட செய்முறை பயிற்சி தர வேண்டும். கொலையாளிகள் புதியவர்களாக இருப்பதால் தடுக்க முடியவில்லை என்பதை முதல்வர் ஒத்துக்கொண்டுள்ளார். இதற்குக் காரணம் பயங்கரவாதிகளை உருவாக்குபவர்களை, பதுங்க இடம் கொடுப்பவர்களை, பண உதவி செய்பவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்காததே காரணம். புலனாய்வுத் துறை சிறப்பாக செயல்பட்டால், அதன் குறிப்புகளைக் கொண்டு சட்டம் ஒழுங்கு காவலர்கள் கண்காணிப்போடு செயல்பட்டால் சதி திட்டம் தீட்டி படுகொலைகள் செய்யும் முஸ்லீம் பயங்கரவாதிகளை முற்றிலுமாக ஒழிக்கலாம்.

மேலும், தமிழகத்தின் வளர்ந்து வரும் ஜனத்தொகையோடு ஒப்பிடுகையில் கடந்த காலத்தைவிட குற்றங்கள் குறைவாக இருப்பதாக தெரிவித்துள்ளார் முதல்வர். ஆனால் மதுபானத்தால் நடக்கும் கொலைகள், பாலியல் குற்றங்கள், தற்கொலைகள், சண்டை சச்சரவுகள், பெருகும் வியாதிகளால் இவற்றினால் இறப்போர் குறித்த தகவலை கலால் வாரியத்தைக் கொண்டே கணக்கெடுத்துப் பார்த்தால், குற்றங்களில் 40% மது போதையால் நிகழ்வதை தெரிந்துகொள்ளலாம். இறப்போரில் 50 சதவீதம் மதுவே காரணம். டாஸ்மாக் விற்பனை எவ்வளவு அதிகரிக்கிறதோ அதுபோல் இரண்டு மடங்கு குற்றச் செயல்கள் அதிகரிக்கின்றன. தினசரி பத்திரிகைகளில் குறைந்தது பத்து செய்திகளாவது மதுபோதையால் நடக்கும் குற்றச்செயல்கள் இருக்கின்றன.

எனவே, மதுக்கடைகளை புதிதாக திறப்பதை அரசு நிறுத்த வேண்டும். மேலும் மதுக்கடைகளை படிப்படியாக குறைக்கவும், மதுவால் ஏற்படும் ஆபத்துக்களை குறித்த விழிப்புணர்வை பரப்ப வேண்டும். பள்ளிகளில் நற்சிந்தனை வகுப்புகள் நடத்தி குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடாது என்ற எண்ணத்தையும், நல்லவர்களாக, வல்லவர்களாக இருக்கும் பக்குவத்தை இளம் வயதிலேயே மாணவர்கள் மனதில் பதிய வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

என்றும் தேசிய, தெய்வீகப் பணியில்

(இராம கோபாலன்)

இச்செய்தியினை தங்கள் பத்திரிகையின் அனைத்துப் பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.